**தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பினை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.1 |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசிக் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | | இணக்கமின்மை | 2.6 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.4 |
| | அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 2. | வர்த்தக முற்பணக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.5 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | | முகாமைத்துவ நலிவுகள் | 2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

பிடிபத புதிய பாடப்புத்தக களஞ்சியத் தொகுதியின் A களஞ்சியத்தின் கூரையை வலையிட்டு மூடுவதற்காக ரூபா 2,571,814 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த பணியை நிறைவேற்றுவதற்காக கல்வி அமைச்சின் பாடசாலைக் கட்டிடப் பிரிவினால் ரூபா 5,666,453 தொகையான பொறியில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பட்டயம் பெற்ற பொறியியலாளர் ஒருவரால் அந்த பொறியியல் மதிப்பீடானது ரூபா 2,238,450 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. முதலாவதாக தயாரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டின் மூலப்பொருட்களின் விலைகளை விட திருத்தப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிலுள்ள மூலப்பொருட்களின் விலைகளில் 15 சதவீதமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், ஒரே காலப்பகுதியினுள் தயாரிக்கப்பட்ட இரு பொறியியல் மதிப்பீடுகளில் மூலப்பொருட்களின் விலைகளில் பொருண்மையான விலகல்கள் காணப்பட்டமையால் பொறியியல் மதிப்பீடுகளை தயாரிப்பதிலான சரியான தன்மை தொடர்பில் கணக்காய்விற்கு சிக்கலுக்குரியதாக இருந்தது.

(ஆ) 2016 நவம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஓப்பந்தமானது 2017 மார்ச் 31 ஆந் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 2.2 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

**இலத்திரனியல் பாடப் புத்தகங்களை தயாரித்தல்**

-----------------------------------------------------------------------------------

அறிவுக் கேந்திரத்தின் அடிப்படையாக பாடசாலைக் கட்டமைப்பினை மீள் உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ரூபா 50 மில்லியன் படியான கடன் நிதிகள் கிடைத்திருந்ததுடன், இந்த செயற்திட்ட கடனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலத்திரனியல் பாடப்புத்தகங்களின் உற்பத்திக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 24.5 மில்லியனும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் எனுமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 11 ஆம் தரத்திற்கான விஞ்ஞான பாடப்புத்தகம் இவ்வாறான இலத்திரனியல் பாடப்புத்தகமாக தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 11 ஆம் தரத்திற்கான விஞ்ஞான பாடத்திற்கான இலத்திரனியல் பாடப்புத்தகத்தினை தயாரிக்க வேண்டுமென திணைக்களத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த புதிய உற்பத்தி இலங்கை போன்றதொரு நாடொன்றில் நடைமுறைச் சாத்தியமானதாக நடைமுறைப்படுத்த இயலுமா என்பது தொடர்பில் மற்றும் இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பினுள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பில் சாத்தியவள மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், முறையான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி அமைச்சின் தரவு முகாமைத்துவ கிளையினூடாக பெறப்பட்ட தகவல்களுக்கடைய இலங்கையில் 11 ஆந் தரம் வரையான வகுப்புக்கள் காணப்படும் 702 பாடசாலைகளில் கணனிகள் பயன்படுத்தப்படுவதில்லை, மற்றும் சுமார் 1,350 பாடசாலைகள் ஒன்று அல்லது இரண்டு கணனிகளை மட்டும் காணப்படுகின்றது என்பது இனங்காணப்பட்டது. இதற்கமைய, கணனியை பயன்படுத்ததாத இந்த கஷ்டப் பிரதேசங்களின் மாணவர்களுக்கு 11 ஆம் தரத்தின் விஞ்ஞான பாடத்திற்கான இலத்திரனியல் பாடப்புத்தகத்தினை பயன்படுத்துவதற்குள்ள சந்தர்பபம் இழக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) இந்த பணிக்காக விலைக்கேள்வி கோரல் நிபந்தனைக் கூற்றின் 18.2 ஆம் பந்திக்கமைய உரிய திகதியில் இலத்திரனியல் பாடப்புத்தகங்களை வழங்க முடியாது போனமையின் அடிப்படையில் கலைத்தல் நட்டமாக தாமதமடையும் ஒவ்வொரு நாளுக்காகவும் பெறுமதியில் 0.5 சதவீதம் படியாக வழங்குனருக்கு செலுத்துவதற்குள்ள பட்டியல்களில் குறைத்துக் கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு குறைத்துக் கொள்ளக்கூடிய நட்டத்தின் ஆகக் கூடிய ஒப்பந்த தொகையில் 30 சதவீதமாகும். மதியுரை நிறுவனம் மற்றும் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் விசேட நிபந்தனைகளின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 6.5 ஆம் பந்திக்கமைய இலத்திரனியல் பாடப்புத்தக உற்பத்திக்குரிய கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டிய விடயங்கள் (Deliverables) திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய திகதிகள் குறித்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உரிய திகதிகளில் உரிய விடயங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தாமதமாகிய நாட்களுக்காக ரூபா 2,306,187 தொபையான கலைத்தல் நட்டத்தினை அறவிடாது ரூபா 7,687,290 தொகையான மொத்தத் தொகையும் மதியுரைக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அறிவுக் கேந்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கட்டமைப்பினை மீளமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கடன் நிதியாக கிடைத்துள்ள பணத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,882,653 தொகையான கடன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பெருந்தொகையான வட்டியை செலுத்தியவாறு வெளிநாட்டு கடன் நிதியேற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் பாடப்புத்தகம் 2018 செப்தெம்பர் வரையிலும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 23.4 | 23.2 | 0.2 | 0.8 |
| | மூலதனம் | 54.9 | 49.7 | 5.2 | 9.4 |
| | **மொத்தம்** | **78.3** | **72.9** | **5.4** | **6.8** |
| **2014** | மீண்டுவருபவை | 29.3 | 26.8 | 2.5 | 8.5 |
| | மூலதனம் | 80.8 | 54.2 | 26.6 | 32.9 |
| | **மொத்தம்** | **110.1** | **81** | **29.1** | **26.4** |
| **2015** | மீண்டுவருபவை | 55.4 | 47.2 | 8.1 | 14.6 |
| | மூலதனம் | 55.9 | 49.4 | 6.5 | 11.6 |
| | **மொத்தம்** | **111.3** | **93.6** | **14.6** | **13.1** |
| **2016** | மீண்டுவருபவை | 58.9 | 56.9 | 2 | 3.4 |
| | மூலதனம் | 94.3 | 48.3 | 46 | 48.8 |
| | **மொத்தம்** | **153.2** | **105.2** | **48** | **31.33** |
| **2017** | மீண்டுவருபவை | 56.7 | 53.7 | 2.9 | 5.1 |
| | மூலதனம் | 83.5 | 39 | 44.5 | 53.3 |
| | **மொத்தம்** | **140.2** | **92.7** | **47.4** | **33.8** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் போது தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு குறிப்பான திட்டமொன்றின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால், மூலதன செலவின விடயங்கள் நான்கிற்குரியதாக 67 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 39,857,863 தொகையான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18 | 12.4 | 6.5 | 7 | 42 | 27.3 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாகவுள்ள கடன் மீதிகள்**

(i). ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்

ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 169,675 தொகையான 01 வருடத்தை விஞ்சிய கடன் மீதியை தீர்ப்பனவு செய்ய திணைக்களம் தவறியிருந்தது.

(ii). பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதி பணி நீக்கத்திற்குட்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 130,178 தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட்ட வேண்டியதுடன், அவற்றுள் ரூபா 55,318 தொகையான 5 வருடங்களை விஞ்சிய கடன் மீதியொன்றும் 01 வருடத்தை விஞ்சிய ரூபா 9,500 தொகையும் காணப்பட்டது. இந்த கடன் மீதிகளில் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iii). சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்

திணைக்களத்திலிருந்து சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 567,853 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன், அவற்றுள் 03 முதல் 05 வருடங்கள் வரையான காலம் கடந்த ரூபா 480,072 தொகையான கடன் மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த கடன் மீதி 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

**2.5 வணிக முற்பணக் கணக்கு**

21302 ஆம் விடய இலக்கம் கொண்ட புத்தக அச்சிடல், விளம்பரம் மற்றும் விற்பனைக்குரிய வணிக முற்பண பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுக்கிணங்க அவற்றின் நிதி விளைவுகள் பின்வருமாறு ஆகும்.

| முற்பண கணக்கு நடவடிக்கை | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | |
| | இலாபம் எடுகோள் கட்டணம் நீங்கலாக | (நட்டம்) எடுகோள் கட்டணம் உள்ளடங்கலாக | இலாபம் எடுகோள் கட்டணம் நீங்கலாக | இலாபம் எடுகோள் கட்டணம் உள்ளடங்கலாக |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| புத்தக அச்சிடல் விளம்பரம் விற்பனை | 674.4 | (6,473) | 343.5 | 1,095.4 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்த முடியாதுடன், முன்னைய வருடங்களின் கணக்குகள் தொடர்பிலும் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வெளியிட முடியாதிருந்தது.

(ஆ) 2017 சனவரி 01 இல் உள்ளபடியான ஒதுக்கக் கணக்கில் காணப்படும் ரூபா 36,021,961 தொகையான ஆரம்ப மீதியாவது ஆண்டிற்கான செலவினங்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) புத்தகங்களை அச்சிடும் போது பக்கங்கள் குறைதல் மற்றும் கூடுதலுக்காக செலுத்தப்பட்ட 36,505,028 தொகையான செலவினங்கள் ஐந்தொகையின் நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கடன்பட்டோர் கணக்கில் ஏற்பட்டிருந்த ரூபா 45,311,159 தொகையான வேறுபாடு அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கிற்கு மாற்றப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான எந்தவொரு தகவலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(உ) ஆண்டினுள் கட்டிட வாடகைக்காக ரூபா 6,337,676 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனுள் 2016 ஆம் ஆண்டிற்குரிய கட்டிட வாடகை தொகையான ரூபா 540,599 தொகையும் உள்ளடங்கியிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 136,143 தொகையான நிலுவைப் வாடகை பணம் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அச்சீட்டு கடன்பட்டோர் ஆரம்ப மீதி ரூபா 1,498,258,670 தொகையான இருந்ததுடன், ரூபா 21,869,370 பெறுமதியான உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான சீராக்கங்களை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 ஆம் ஆண்டிற்கான கடன்பட்டோர் ஆரம்ப மீதியினுள் ரூபா 43,587,570 தொகை 2017 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிராததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான அச்சீட்டு கடன்பட்டோர் மீதியினுள்ளும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) திணைக்களத்தின் புத்தக விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களை பேணுவதற்காக கொழும்பு கோட்டை மற்றும் ஒருகொடவத்த களஞ்சியங்களுக்காக வைக்கப்பட்டிருந்த ரூபா 946,150 தொகையான களஞ்சிய வைப்பானது ஐந்தொகையில் ரூபா 625,000 ஆக ரூபா 321,150 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2017 யூன் 30 ஆந் திகதியில் திணைக்களத்தின் களஞ்சியப்படுத்தல் முடிவடைந்திருந்த போதிலும், ஒருகொடவத்த களஞ்சியத்திற்கான ரூபா 853,000 தொகையான வைப்புப் பணமானது கணக்காய்வு திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலாப நட்டக் கணக்கின் தேறிய இலாபம் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டு தொடர்ந்தும் செலவினம் ஒதுக்கீடு செய்யப்படாமையின் பின் எஞ்சிய மீதி ஐந்தொகையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், தேறிய இலாபங்கள் குறிப்பிடப்பட்டு இந்த ஒதுக்கீட்டு கணக்கில் முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 7,845,247,957 தொகையான மீதியொன்று ஒதுக்கீட்டிற்காக ஈடுபட்டிருந்த போதிலும், அந்தக் கணக்கின் எஞ்சிய மீதியொன்று ஐந்தொகையிலும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) தாமதமாக விற்கப்படும் புத்தகங்களில் ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் சேதங்களுக்காக வருடாந்த இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,733,972 தொகையினதும், பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட புத்தக இருப்பு கணக்கிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 58,703,933 ஆன மீதிகளிலிருந்து இலாப நட்டக் கணக்கில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) அச்சீட்டாளர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் பதிவேட்டிற்கமைய 12 ஆம் தரத்தின் தமிழ் மொழிமூல இஸ்லாம் பாடத்திற்கான ஆசிரியர் வழிகாட்டிக் கோவையின் பிரதிகளை அச்சிடுவதற்காக தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 122,000 தொகையான ஒப்பந்தெமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர், அது ரூபா 97,000 ஆக மாற்றப்பட்டிருந்த போதிலும், கணக்கின் ரூபா 122,000 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) தனியார் கம்பனியொன்றிடமிருந்து 2009 ஆம் ஆண்டு முதல் பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 7,431,012 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(க) வருடாந்தம் அச்சிடப்பட்டு அமைச்சிற்கு விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி கடன்பட்டோராக தவறுதலாக பதிவு செய்யப்பட்டமையால் 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா

2,954,000,000 தொகையான கடன்பட்டோர் மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் அரசாங்க அச்சிட்டுக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 110,304 தொகையான பணத்தை அறவிட முடியாதிருந்தது.

(கி) ஒப்பந்த தொகையான ரூபா 125,410,405 பெறுமதியான ஆசிரியர் வழிகாட்டிக் கோவைகள் மற்றும் 45 வகையான பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு 2018 சனவரி மாத இறுதிக்கு முன்னர் கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 யூன் 30 வரையிலும் அந்த புத்தகங்கள் அச்சிடப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 620,831 | 02 கணக்குகளுக்குரிய வழங்கப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த 39 காசோலைகள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 510 (2) (ஆ) | 2,997,188,104 | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திணைக்களத்தின் இலாப நட்டக் கணக்கின் இலாபத்தினை அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவினம்

திணைக்களத்தினால் தமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 35.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருடாந்த ஆளணி வேதன செலவினம் ரூபா 110,216 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 45 | 35 | 10 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 120 | 87 | 33 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 73 | 156 | - | 83 |
| (v) | அமைய/ஒப்பந்தம் | - | 43 | - | 43 |
| | மொத்தம் | 242 | 323 | 45 | 126 |

முறையான அங்கீகாரமின்றி அங்கீகரித்த எண்ணிக்கையை மிகைத்து 126 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.